

# "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை"

நாம் சேவிக்கும் கர்த்தர் சர்வ வல்லமையுள்ள தேவன். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று வேதம் சொல்லுகிறது (லூக்கா 1:37). அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவருடைய அற்புதம் செய்யும் வல்லமை இன்றும் மாறி போகவில்லை (எபி.13:8). அவரை விசுவாசித்தால் உங்கள் வாழ்வில் நிச்சயம் அற்புதம் செய்வார். 'தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை' என்கிற இந்த வசனத்தை ஐந்து கோணங்களில் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## 1. தேவனால் தீர்க்க முடியாத பிரச்சனை ஒன்றுமில்லை (There is no PROBLEM too hard for God to solve)

நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் கடினமான, சவாலான மற்றும் நெருக்கமான சூழ்நிலைகளுக்குள் கடந்து செல்லுகிறோம். ஆனால் தேவன் நம்மோடிருந்தால் எந்த சூழ்நிலையையும் மேற்கொள்ள முடியும். பலத்தினாலும் அல்ல, பராக்கிரனாமத்திலும் அல்ல, தேவனுடைய ஆவியினாலேயே ஆகும். பெரிய பர்வதமே! நீ எம்மாத்திரம்? ...நீ செருபாபேலுக்கு (தேவ பிள்ளைக்கு) முன்பு சமபூமியாவாய் என்று வேதம் சொல்லுகிறது (சகரி.4:6,7). நீங்கள் இன்று சந்திக்கும் "மலை" போன்ற பிரச்சனை என்ன? வியாதியா? பொருளாதார நெருக்கடியா? வேலையில், குடும்பத்தில், திருமணத்தில் பிரச்சனையா? நாளைய தினத்தை எப்படி சந்திப்பது என்று கவலையா? அப்படியானால் இதை அறிந்து கொள்ளுங்கள்-"தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை" (லூக்.1:37).

5000 புருஷர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்கிற பெரிய சவாலை சீஷர்கள் எதிர்கொண்டனர். இருந்ததை கொடுத்தபோது இயேசு அற்புதம் செய்து தேவையை சந்தித்தார் (மத்.14:16-20). முன்பாக செங்கடல் பின்புறம் எகிப்தின் சேனை என்ற இக்கட்டான சூழ்நிலையை இஸ்ரவேலர் சந்தித்தபோது கர்த்தர் அற்புதமாக செங்கடலை பிளந்து வழிதிறந்தார் (யாத்.14:21,22). வழியே இல்லாத இடத்தில் அவர் உங்களுக்காக வழியைத் திறப்பார் (ஏசாயா 43:19). கோணலானவைகளைச் செவ்வையாக்குவார் (ஏசாயா 45:2). நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே.32:27). ஆகவே திடன் கொள்ளுங்கள்! கர்த்தரை நம்புங்கள். அவர் அற்புதம் செய்வார்.

## 2. தேவனால் நிறைவேற்ற முடியாத வாக்குத்தத்தம் ஒன்றுமில்லை (There is no PROMISE too hard for God to fulfill)

நம்முடைய தேவன் தமது வார்த்தையை நிறைவேற்ற வல்லவர் (யோசுவா 23:14; 1 சாமு.3:19; 2 நாளா.6:10,15; நெகே.9:8). தேவன்

பொய் சொல்ல ஒரு மனிதன் அல்ல, அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா என்று வேதம் கூறுகிறது (எண்.23:19). கர்த்தர் ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் வயது சென்ற நிலையிலும், பிள்ளையில்லாத அவர்களுக்கு ஒரு பிள்ளையைத் தருவேன் என்று வாக்குப்பண்ணினார் (எபி.11:12). அவர் சொன்னபடியே நிறைவேற்றினார் (ஆதி.21:1). ஈசாக்கின் பிறப்பு, கர்த்தர் தம்முடைய வார்த்தையை நிறைவேற்ற உண்மையும், வல்லமையும் உள்ளவராயிருக்கிறார் என்பதற்கு சான்றாகும். இஸ்ரவேலர்கள் கர்த்தர் தங்களுக்கு வாக்குப் பண்ணினபடியே கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொண்டனர் (யாத்.3:8; 6:6-8). யோசுவா ஜனங்களை நோக்கி, "கர்த்தர் உங்களுக்குச் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை; அவைகளெல்லாம் உங்களுக்கு நிறைவேறிற்று" என்று கூறினான் (யோசுவா 23:14; 21:45). ஆம் கர்த்தர் தம்முடைய வாக்கை உங்கள் வாழ்வில் நிச்சயம் நிறைவேற்றுவார். தாமதித்தாலும் நிச்சயம் நிறைவேறும் (ஆபகூக் 2:3). பொறுமையாயிருங்கள். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை!

## 3. தேவனால் பதிலளிக்க முடியாத ஜெபம் ஒன்றுமில்லை (There is no PRAYER too hard for God to answer)

நாம் சேவிக்கிற தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிறவர் (யோவான் 14:14). என்னை நோக்கி கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு மறு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" என்று கர்த்தர் சொல்கிறார் (எரே.33:3). தேவ மனிதர்கள் ஜெபித்தபோது கர்த்தர் ஆச்சரியமான காரியங்களைச் செய்திருக்கிறார். ஆபிரகாம் தேவனை நோக்கி ஜெபித்தபோது தேவன் அபிமெலெக்கையும் அவன் மனைவியையும் குணமாக்கி, பிள்ளை பெறும்படி அநுக்கிரகம் பண்ணினார் (ஆதி.20:17). யோசுவா ஜெபித்தபோது, சூரியனை தரித்து நிற்க செய்தார் (யோசுவா 10:12). எலியா ஜெபித்தபோது வானத்திலிருந்து அக்கினி இறங்கிற்று (1 இராஜா.18:36-38). பேதுரு ஜெபித்தபோது, மரித்த பெண் உயிரோடு எழும்பினாள் (அப்.9:40). தேவனால் பதிலளிக்க முடியாத ஜெபம் என்று ஒன்றும் இல்லை. நாம் அவருடைய சித்தத்தின்படி சுத்த இருதயத்தோடு வேண்டிக்கொள்ளும்போது அவர் நிச்சயம் நமக்கு பதிலளிப்பார் (1 யோவான் 3:21,22;5:14). நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது (யாக்.5:16). ஜெபியுங்கள்! அற்புதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

## 4. தேவனால் இரட்சிக்கமுடியாத நபர் ஒருவருமில்லை (There is no PERSON too hard for God to save)

இரட்சிக்கக்கூடாதபடி கர்த்தருடைய கரம் குறுகிப்போகவில்லை என்று வேதம் சொல்லுகிறது (ஏசா.59:1;50:2; எண்.11:23). இரட்சிக்க முடியாத நபர் என்று அவருடைய பார்வையில் ஒருவரும் இல்லை. ஒவ்வொரு நாளும் இயேசு ஆயிரக்கணக்கான நபர்களை இரட்சித்து, தம்முடைய மந்தைக்குள் சேர்த்து வருகிறார். குடிகாரர்கள், கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள், விபச்சாரக் காரர்கள் என பலரும் இயேசுவின் வல்லமையுள்ள இரத்தத்தினால் கழுவப்பட்டு, இரட்சிக்கப்பட்டு வருகின்றனர். நீங்கள் யாரோ சிலருடைய இரட்சிப்பிற்காக ஜெபித்து

வரலாம். ஒருவேளை அவர்கள் இன்னும் மனந்திரும்பாமல் இருக்கலாம். தொடர்ந்து ஜெபியுங்கள். கர்த்தர் நிச்சயம் அவர்களை இரட்சிப்பார். சகேயு, பவுல், லீதியாள் போன்றவர்களை இரட்சித்த தேவன் உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் நீங்கள் ஜெபிக்கும் நபர்களையும் அவர் இரட்சிக்க வல்லமையுள்ளவர் (லூக்கா 19:9; அப். 9:1-6; 16; 14,15).

## 5. தேவனால் எழுப்புதல் கொண்டு வரமுடியாத இடம் ஒன்றுமில்லை (There is no PLACE too hard for God to bring revival)

எசேக்கியேல் தீர்க்கதரிசி, எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கை தன்னுடைய தரிசனத்தில் கண்டார் (எசே. 37:1-10). அந்த இடம் மிகவும் நம்பிக்கையற்றதாகவும், உயிரற்றதாகவும் இருந்தது, ஜனங்களும் 'எங்கள் நம்பிக்கை அற்று போயிற்று' என்றார்கள் (வச.11). ஆனால் தேவன் நம்பிக்கையற்ற இடத்தில் நம்பிக்கை தருகிறவர். உலர்ந்த எலும்புகளை உயிரடைய செய்கிறவர். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. நீங்கள் ஊழியம் செய்யும் கிராமத்திலும், பட்டணத்திலும் தேவன் மகிமையான எழுப்புதலை கொண்டு வருவார். நாம் தொடர்ந்து ஜெபித்து சுவிசேஷ பணியை செய்வோம். நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று வாக்குபண்ணியிருக்கிறார் (அப். 2:17). அவர் அவாந்திர வெளியை தண்ணீர் தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீரூற்றாகவும் மாற்ற வல்லவர் (சங். 107:35). கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை! ஆமென்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.